Judicial Form No.53
(See Rule 42)

# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)

## IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, NAMAKKAL

## Sessions Case No.10 of 2026

## Deposition of P.W.1 witness for Prosecution

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : திரு. ஷியாம் | Taluk | : | |
| Father's/ Husband's Name | : | Calling | : | |
| Village | : | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 18th day of March 2026.

(A1,A3,A5 to A7 are present. A2 and A4 absent. Petition U/s.317 Cr.P.C is filed and allowed.)

**முதல்நிலை விசாரணை:**

நான் தற்போது அக்சயா அபாட்மெண்ட் சங்கர் நகர் சேலத்தில் குடியிருந்து Bharathi AXA Life Insurance-ல் Life Advisor ஆக தொழில் செய்கிறேன். நான் இவ்வழக்கு சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை. இவ்வழக்கு எதிரிகள் யாரையும் எனக்கு தெரியாது. இவ்வழக்கு சாட்சிகளில் ரவீந்திரனை தெரியும். வெங்கடாசலத்தை தெரியாது. ரவீந்திரன் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வந்தார். இவ்வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை. இவ்வழக்கில் என்னை எதற்காக சாட்சியாக போட்டுள்ளார்கள் என்று எனக்கு தெரியாது.

(இந்நிலையில் இச்சாட்சியை அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவிக்க அனுமதி கோரியதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டது.)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :**

இவ்வழக்கு சம்பந்தமாக என்னை போலீசார் விசாரித்தார்கள் என்றும், நான் போலீசாரிடம் இவ்வழக்கு சம்பவத்தை பார்த்ததாகவும் 27.05.2015ம் தேதி நான்

எனது சொந்த வேலையாக இரு சக்கர வாகனத்தில் அம்மாபேட்டை ராமசுந்தரம் தெருவில் உள்ள பத்திர அலுவலகத்திற்கு போயிருந்தேன் என்றும் , அப்போது எனக்கு தெரிந்த சாட்சிகள் ரவீந்திரனும், வெங்கடாசலமும் மற்றும் சிலரும் பத்திரம் பதிவு செய்ய ரவீந்திரனுக்கு சொந்தமான காரில் வந்தார்கள் என்றும், அவர்கள் வேலையை முடித்துவிட்டு காரில் போனார்கள் என்றும், நானும் எனது வேலையை முடித்துவிட்டு அவர்கள் காருக்கு பின்னால் போனேன் என்றும், அப்போது சுமார் 1 மணியளவில் ராமசுந்தரம் தெருவில் போய் கொண்டிருந்தபோது எனக்கு ஏற்கனவே தெரிந்த எதிரிகள் செந்தில்குமார், கௌதமன் ஆகியோர் இருசக்கரவாகனத்தில் வந்து காரை வழிமறித்து நிறுத்தி கார் டிரைவர் சீனிவாசனை இறக்கிவிட்டுவிட்டு செந்தில்குமார் காரையும், கௌதமன் பைக்கையும் ஓட்டி கொண்டு போனார்கள் என்றும் அதன்பிறகு, சாட்சிகள் ரவீந்திரன் மற்றும் வெங்கடாசலத்தை சின்னதிருப்பதி அருகே உள்ள தார்சு வீட்டிற்கு கடத்தி கொண்டு போய் அடைத்து வைத்து அவர்களை அடித்து ரவீந்திரனிடமிருந்து ரூ.1 லட்சத்து 70 ஆயிரம் வெங்கடாசலத்திடமிருந்து ரூ.4 லட்சத்தையும் பிடுங்கிகொண்டு வெறும் பத்திரத்தில் ரவீந்திரனிடம் கையெழுத்து வாங்கி இது யாரிடமும் சொல்லக்கூடாது என்று மிரட்டி அனுப்பி விட்டதாகவும் வெங்கடாசலத்தை அங்கேயே அடைத்து வைத்திருந்ததாகவும் தெரிந்து கொண்டேன் என்றும் சொல்லியிருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

எதிரிகள் எனக்கு தெரிந்தவர்கள் என்றும், அவர்களுக்கு பயந்து கொண்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:** இல்லை.

**மறுவிசாரணை :** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்ல என்னால் கூற, தட்டச்சு செய்யப்பட்டு அவருக்கு படித்துக்காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கைரேகை/கையெழுத்து இட்டார்.

Sd/- R. Gurumurthy
முதன்மை மாவட்ட நீதிமன்ற நீதிபதி,
நாமக்கல்.